## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை

## யாழ்ப்பாணம் மாவட்டம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 25 மார்ச் 2019 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 30 யூன் 2019 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 31 ஒக்ரோபர் 2019 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2018 திசெம்பர் 31 இல் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் நிதிநிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**கணக்கீட்டு கொள்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

## 1.4 இணக்கமின்மைகள்

---

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

---

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் | | | |
| | உப பிரிவு 16 (2) | வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | உரிய சட்டத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (ஆ) | 1987ஆம் ஆண்டு 15ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டம் | | | |
| | பிரிவு 158 (1) | ஆதனவரி நிலுவை செலுத்தத் தவறியோருக்கு தவிசாளரினால் பற்றாணைச்சீட்டு வழங்கப்பட்டிருக்கவில்லை | உரிய சட்டத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (இ) | 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள் | | | |
| | - அத்தியாயம் X இன்பிரிவு 193 | மீளாய்வாண்டிற்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவுத் திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | உரிய நிதி, நிருவாக விதிகளுக்கு இணங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |
| (ஈ) | வடக்கு மாகாண நிதி சுற்றுநிருபம் | | | |
| | 29 திசெம்பர் 2016 இன் 30/2016 ஆம் இலக்கம் | சபையின் 04 வாகனங்களிற்கு எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரிய நிதி, சுற்றுநிருபத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும். | வாகனங்களினை எரிபொருள் பரீட்சிப்புக்கு உட்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. |

### 1.5.2 வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 154 ஆம் பிரிவின் பிரகாரம், குறித்த சில காணிகள் விற்பனை மீது 1% சதவீத விற்பனை வரி அறிவிடப்படவேண்டிய போதிலும், சபையினால் அவற்றினை அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 64,654,300 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,191,680 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் * | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் * | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 129,500 | - | 222,089 | 2,397,676 | 670,400 | - | - | - |
| வாடகைகள் | 15,598,396 | - | 16,524,871 | 2,124,915 | 22,765,680 | - | 2,677,922 | 6,266 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,585,400 | - | 1,988,320 | - | 1,764,000 | - | 322,999 | - |
| ஏனைய வருமானம் | 100,074,214 | - | 112,690,656 | 50,324,764 | 93,969,070 | - | 35,749,308 | 6,418,520 |
| | **117,387,510** | **-** | **131,425,936** | **54,847,356** | **119,169,150** | **-** | **38,750,229** | **6,424,786** |

*** பட்டியலிடப்பட்ட வருமானம் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.**

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2017 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 38,750,229 ஆக இருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 131,425,936 ஆக அதிகரித்துள்ளமையால் 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2018 ஆம் ஆண்டில் வருமான சேகரிப்பின் செயலாற்றல் ரூபா 92,675,707 இனால் அதிகரிக்கப்பட்டுள்ளது. எனினும் பட்டியல்படுத்தப்பட்ட வருமானத்தை உறுதிப்படுத்த முடியாதுள்ளது. | பட்டியல்படுத்தப்பட்ட வருமானத்தினை உறுதிப்படுத்த வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை |

### 2.2.3 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் வீதவரி நிலுவைகளின் கூட்டுமொத்தம் ரூபா 2,397,676 இனை அறவிட சபையினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வீதவரி நிலுவைகளினை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | நிலுவைகளினை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. |

### 2.2.4 வாடகை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் கடைவாடகை நிலுவைகள் ரூபா 128,199 பெறுமதியினை அறவிட சபையினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சபையினால் வாடகை நிலுவை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | நிலுவைகளை அறவிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (ஆ) மீளாய்வாண்டில் சந்தைக் குத்தகை நிலுவைகள் ரூபா 1,837,740 பெறுமதியினை அறவிட சபையினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | குத்தகை நிலுவைகள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தற்போது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. |

### 2.2.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 6,845,462 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் ரூபா 8,262,742 தொகையான முத்திரைக் கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | நிலுவையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நிலுவையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், 30 முக்கிய விடயங்கள் தொடர்பில் உப விதிகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 2018 திசெம்பர் 31 வரையிலும் 06 விடயங்களுக்கு மாத்திரம் உப விதிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | குறிப்பிடப்பட்ட அனைத்து விடயங்களையும் நடைமுறைப்படுத்துவதற்கான உபவிதிகளை உருவாக்குவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. |

### (ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய 30 செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | உப விதிகளுக்கிணங்க வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

### (இ) நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிராமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையினால் தயாரிக்கப்பட்ட ஒப்பந்த வேலைகளிற்கான செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம், சபையினால் செயற்படுத்தப்பட்டிருக்க வேண்டிய 25 ஒப்பந்த வேலைகளில் 02 ஒப்பந்த வேலைகள் மாத்திரம் செயற்படுத்தப்பட்டிருந்தது. ஏனைய ரூபா 24,110,000 பெறுமதியான 23 செயற்பாடுகள் செயற்படுத்த முடியாதிருந்தது. | கிடைக்கின்ற வருமானத்திற்கேற்பவே நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் | மொத்த நிதி கிடைக்கப்பெறாமையினாலேயே செயல்நடவடிக்கைத்திட்டம் செயற்படுத்தப்பட முடியாத நிலையுள்ளது. தற்போது நான்கு வேலைகள் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

## (ஈ) கைவிடப்பட்ட செயற்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்டிருந்த ரூபா 2,999,724 பெறுமதியான முதலைக்குழி குடிநீர் விநியோகத் திட்டம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளினைப் பெற்றுக்கொள்ளாது திட்டம் கைவிடப்பட்டிருந்தது. | உரிய நோக்கங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். | செயற்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

## (உ) திண்மக் கழிவு முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (i) | மண்டானில் திண்மக்கழிவுகள் அகற்றுவதற்காக குறிப்பிட்ட பிரதேசம் தெரிவு செய்யப்பட்டிருந்த போதும் தேசிய கொள்கைகளின் படி திண்மக்கழிவுகள் தரம் பிரிக்காமல் சேகரிக்கப்படுவதுடன் கழிவுகள் கொட்டப்படும் இடங்களில் நாள்தோறும் சேகரிக்கப்படுகின்ற கழிவுகள் நறுக்கப்பட்டு மண்தட்டு இடப்பட்டு மூடப்பட்டிருக்கவில்லை. | திண்மக்கழிவுகள் அகற்றுவதற்கான மேற்பார்வை செய்யப்படுதல் வேண்டும். | உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| (ii) | திண்மக்கழிவு பணிகளில் ஈடுபடுத்தப்படும் சுகாதாரத் தொழிலாளர்களுக்கு காலத்திற்கு காலம் மேற்கொள்ள வேண்டிய மருத்துவ பரிசோதனைகள் பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுகாதாரத் தொழிலாளர்களுக்கு வருடாந்தம் மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் | எதிர்வரும் காலங்களில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

### (ஊ) சுற்றுச்சூழல் பிரச்சினைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திண்மக்கழிவுகள் அகற்றுவதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்த பிரதேசத்தில் கொசுக்கள் நுளம்புகள் பரவுவதனை தடுப்பதற்காக கொசு எண்ணெய் அடித்தல் மற்றும் துர்நாற்றத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது, |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | உள்@ராட்சி உதவியாளரினால் தயாரிக்கப்பட வேண்டிய அறிக்கைகள் உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாமையினால் பிரதேசசபைக்குரிய முக்கிய பணிகள் நிறைவேற்றப்படாமல் இருந்தது. | உரிய அறிக்கைகள் உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) | சபையில் 02 மயானக் காவலாளிகள் கடமையாற்றுகின்ற போதும் மயான வரி அறவிட சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 13 மயானங்களிற்கும் மயான வரி அறவிட சபையினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் | உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |
| (இ) | சபையின் எல்லையிலுள்ள 12018 ஆதனங்களுக்கு கடந்த 48 ஆண்டுகளுக்கு மேலாக ஆதனவரி மீள் மதிப்பீடு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | ஆதனவரி மீள் மதிப்பீடு மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் | விலை மதிப்பீட்டு திணைக்களத்தினால் மீள் மதிப்பீட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. இதனால் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளமுடியவில்லை. |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையானது உரியவாறு மனித வளத்தைப் பெற்று ஈடுபடுத்தாமையினால் அத்தகைய 21 மனிதவளங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகள் தாமதமடைந்துள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது. | பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

### 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 134 ஆம் பிரிவுக்கு அமைய சோலைவரி அறவிடுவதற்காக வருடாந்தம் சபையினால் ஆதன உரிமையாளர்களுக்கு K படிவம் வழங்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ள போதும் 2018 ஆம் ஆண்டில் 12018 ஆதனங்களுக்கு K படிவம் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. | சபையினால் உரிய சட்டத்தின் அறிவுறுத்தல்களுக்கமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | நிலுவைகள் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.5.1 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் பயன்பாட்டில் உள்ள 04 வாகனங்கள் நாளதுவரை | வாகனங்களின் உரிமையை மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட | வாகனத்திற்கான பதிவுப்புத்தகம் இல்லாததன் காரணமாக சபையின் |

| | | |
|---|---|---|
| சபையின் பெயருக்கு உரிமை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வேண்டும். | பெயரிற்கு உரிமைமாற்றம் செய்யமுடியாதுள்ளது. |

**3.5.2 விளைவற்ற சொத்துக்கள்**

---------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கட்டைவேலி என்னும் இடத்திலுள்ள முன்பள்ளியின் தளபாடங்களும் பராமரிப்பின்றி காணப்படுவதுடன் கடந்த 05 வருடங்களாக செயற்படுத்தப்படாத நிலையில் காணப்படுகிறது. | கணிப்பீட்டுச் சபையின் சிபாரிசுகளிற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் | இது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| (ஆ) | திண்மக் கழிவு முகாமைத்துவ செயற்பாட்டிற்காக ரூபா 2,208,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த பொறி 01 வருடத்திற்கு மேலாக பயன்படுத்தப்படாமலுள்ளது. | இயந்திரத்தை தொடர்ந்து செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | இயந்திரத்தை செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**3.6 பெறுகை**

--------------

**3.6.1 பெறுகைத் திட்டம்**

------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான பெறுகைள் திட்டமானது பிரதேச சபையினால் வழங்கல்கள் மற்றும் சேவைகள் செயற்பாடுகளுக்காக தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். இருந்த போதிலும் சேவைகளுக்காக பெறுகை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைள் திட்டத்திற்கு அமைய வழங்கல் சேவைகள் தயாரிக்கப்பட வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

---

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

---

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையின் பாதீட்டு மீண்டுவரும் செலவினங்களையும் உண்மையான மீண்டுவரும் செலவினங்களையும் ஒப்பிடும் போது ஆளுக்குரிய வரும்படிகள் பயணச்செலவுகள், வழங்கு பொருட்களும் தேவைப் பொருட்களும், மூலதனச் சொத்துக்களைப் பழுதுபார்த்தலும் பேணலும், வட்டிக் கொடுப்பனவுகள், பங்குலாபங்கள், மிகையூதியங்கள் மானியங்கள், உதவுதொகைகள், உதவிப்பணங்கள் ஓய்வூதியங்கள், இளைப்பாற்று நயங்கள், பணிக்கொடைகள் செலவினங்கள் சாதகமாகவும் ஏற்றியிறக்கல், தொடர்பிணைப்பு பயன்பாட்டுச்சேவை மற்றும் பிறசேவைகள் செலவினங்கள் பாதகமாகவும் காணப்படுகின்றன. | பாதீட்டினை சரியான முறையில் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்பாராத வருமானங்கள் செலவீனங்கள் கிடைத்தமையினால் வேறுபாடு காணப்பட்டுள்ளது. |